

# தகவல் அறியும் உரிமைக்கு மூன்று வருடங்கள்

2020 பெப்ரவரி மாதம் 03 திகதியுடன் எமக்கு தகவல் அறியும் உரிமை கிடைத்து மூன்று ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு அவசியமான தகவல்களை வழங்கும் பொருட்டு சகல அரச நிறுவனங்களுக்கும் கடப்பாடு உண்டு என்பதால் அரச நிறுவனம் ஒவ்வொன்றிலும் தகவல் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். தகவலுக்கான உரிமையை மிகவும் பலம் வாய்ந்த ஒரு கருவியாக மாற்ற வேண்டுமானால் பிரஜைகளும் அரச உத்தியோகத்தர்களும் முக்கிய பங்காற்ற வேண்டும். பிரஜைகள் என்ற வகையில் நாம் முடிந்தவரையில் தகவலுக்கான உரிமையை பயன்படுத்த வேண்டிய அதே சமயம் அரச உத்தியோகத்தர்கள் தகவல் அறியும் உரிமைக்கு முக்கியத்துவம் அளித்து குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் கோரப்பட்டுள்ள தகவல்களை அளித்துதவ வேண்டும்.

தகவல் அறியும் உரிமை பொது மக்களுக்கும் அரசுக்கும் இடையில் வலுவான தொடர்பைக் கட்டியெழுப்பும் பாலமாக இருப்பினும், அந்த உரிமையை பயன்படுத்துவோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. குறிப்பாக, ஊடகவியலாளர்கள் சிவில் அமைப்புகள் மற்றும் முதியோர் இந்த உரிமையை கூடுதலாக பிரயோகித்து அவர்கள்தம் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதை அவதானிக்க முடிகிறது. எவ்வாறாயினும், தகவல் அறியும் உரிமையை பயன்படுத்திக்கொள்ளும் இளைஞர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இளைஞர் சமூகத்தை தகவல்களின் பொக்கிஷங்களாக மாற்றுதல் ஒரு நாட்டை பௌதீக ரீதியாகவும், மனிதவள ரீதியாகவும் அபிவிருத்தி செய்வதற்கு பாரிய அளவில் துணை புரியும். தகவலுக்கான உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி உச்ச பயன் அடைந்த அனைவரும் இளைஞர் சமூகத்தை விழிப்புணர்வு செய்வார்களென நம்புகிறோம். இளைஞர் சமூகம் அதேபோல் நாட்டை பொறுப்பேற்கவுள்ள பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் தகவல் அறியும் உரிமை தொடர்பான ஒரு கருத்தாடலை ஆரம்பிப்பது முக்கியமானது.

தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு மக்களுக்கு கிடைத்துள்ள பலமான ஆயுதமாக தகவல் அறியும் உரிமை உள்ளது என நாம் நம்புகிறோம். தகவல் அறியும் உரிமை மக்களுக்கு கிடைத்த நாள் தொடக்கம் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்தி வரும் எமது நிறுவனம் மக்களின் ஓய்வூதியம் தொடக்கம் கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற பொதுப் பிரச்சினைகளுக்கும் தீர்வு தேடுவதில் மக்களுடன் இணைந்து நட்புறவுடன் செயற்பட்டு வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த செய்தித்தாளை வாசிக்கும் நீங்கள், மேலும் ஒருவரை இந்த தகவல் அறியும் உரிமை தொடர்பில் விழிப்புணர்வு செய்வீர்களானால் அது நாட்டின் எதிர்காலத்தில் முக்கிய பங்கினை வகிப்பதாக அமையும். அதேபோல், உங்கள் பிரதேசத்தில் வாழும் மக்கள் தகவல் அறியும் உரிமை தொடர்பாக விழிப்புணர்வு பெற வேண்டுமாயின் அதற்காக உங்களுடன் இணைந்து செயற்பட நாங்கள் தயாராக உள்ளோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## தகவல் அறிவு

**01.** பாராளுமன்றத்தில் தகவலுக்கான உரிமைச்சட்டம் எந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது?

A. 2014  B. 2015  C. 2016  D. 2017

**02.** தகவல் பெறுவதற்கான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்த பின்னர் எவ்வளவு காலத்தினுள் அதற்கான பதில் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்?

A. வேலை நாட்களுக்குள்  B. வேலை நாட்களின் பின்னர்

C. பொதுவான 14 நாட்களுக்குள்  D. பொதுவான 14 நாட்களுக்குப் பின்னர்

**உங்களுடைய பதிலை 077 432 3285 என்ற இலக்கத்திற்கு பின்வருமாறு குறுந்தகவல் மூலம் அனுப்பி வையுங்கள்.**

<**உங்கள் பெயர்**> space <**முகவரி**> space <**பதில் 01**> space <**பதில் 02**>


**உங்களுக்கு இச் செய்தித்தாள் தேவையற்றது எனின், அதனை கீழ் காணும் முகவரிக்கு திருப்பி அனுப்புங்கள்.**

**ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா**
**இல 5/1, எலிபேங்க் வீதி,**
**கொழும்பு 5.**

**தொலைபேசி - (94) 11 4396781, 4369782, 4369783**
**தொலை நகல் - (94) 11 2501707**
**மின்னஞ்சல் -** tisl@tisrilanka.org



# குரல்

"குரல் அற்றறோரின் குரல்"

2020 மார்ச்


# "குரலற்ற மக்களின் குரலாக இருப்போம்"



ஒரு குடியரசில் அரசாங்கத்தின் செயற்பாட்டை மக்கள் தீர்மானிக்கின்றனர். அதேபோல் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களை பொதுமக்களின் வரிப்பணத்தைக்கொண்டு இயக்குவதால் பொதுமக்களுக்கு செலவு செய்யப்படும் நிதி பற்றிய முழுமையான விபரங்களை அறிந்து கொள்ளும் பூரண உரிமை உண்டு. ஜனநாயக நாடொன்றில் இருக்கவேண்டிய அடிப்படை அம்சமான தகவல் அறியும் உரிமையை மக்களுக்கு வழங்கி, 2016 ஆண்டின் 12 இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் 2017 பெப்ரவரி மாதம் 03 திகதி தொடக்கம் அது நடைமுறைக்கு வந்தது. அதன்படி, அதுவரை காலமும் பொதுமக்களால் அணுக முடியாதிருந்த பெருமளவான அரசாங்கத் தகவல்களை அணுகும் வாய்ப்பு மக்களுக்கு கிடைத்தது. குறிப்பாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்கள், பொதுமக்களின் பணம் கையாளப்படும் விதம், செய்து கொள்ளப்படுகின்ற உடன்படிக்கைகள் போன்றவை தொடர்பான தகவல்களை தம் விருப்பத்தின்படி பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்கான சட்டரீதியான அடிப்படையை அந்தச் சட்டம் உறுதிப்படுத்துகின்றது. அவ்வாறே, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப் குழு) நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை சேகரிக்கும் வாய்ப்பு ஊடகங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளமை தகவல் அறியும் உரிமையின் கீழ் பொது மக்களுக்குக் கிடைத்த பாரிய வெற்றி எனலாம்.


**தகவலுக்கான உரிமைச் சட்டமானது தனியாக தனிப்பட்ட தேவைகளுக்கான தகவல்களை அறிந்து கொள்வதிலிருந்து அப்பாற்பட்டு சமூக ரீதியாக பெறுமதிவாய்ந்த செயற்பாட்டில் இணைந்து கொள்ளக்கூடிய ஒரு கருவி.**


தகவலுக்கான உரிமைச் சட்டமானது தனியாக தனிப்பட்ட தேவைகளுக்கான தகவல்களை அறிந்து கொள்வதிலிருந்து அப்பாற்பட்டு சமூக ரீதியாக பெறுமதிவாய்ந்த செயற்பாட்டில் இணைந்து கொள்ளக்கூடிய ஒரு கருவி. ரத்மலானை பிரதேசத்தில் வசிக்கும் திரு நளிந்த அமரவீர* எடுத்த நடவடிக்கை இதற்கான சிறந்த உதாரணம் எனலாம். ஒரு வருடத்திற்கும் மேலாக தங்களுடைய பிரதேசத்தில் வாழும் 150க்கும் மேற்பட்டவர்களின் தினசரி வாழ்வில் இடையூறு ஏற்படுத்திய, இடைநடுவில் கைவிடப்பட்டிருந்த சாக்கடை தொகுதி குழாய் இடல் பற்றிய தகவல்களை தகவல் அறியும் உரிமையின் கீழ் கோரியிருந்தார். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையிலிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின்படி சம்மந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் உடன்படிக்கையை மீறி செயற்பட்டுள்ளதை அவர் அறிந்து கொண்டார். திரு அமரவீர இதனை நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் முறையிட்டார். அதிகார சபையின் அதிகாரிகளை ஒப்பந்தக்காரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தூண்டியது திரு அமரவீருக்கும் எங்களுக்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றே கூறவேண்டும்.

பிரஜைகள் என்ற வகையில் நாம் பெற்றுக்கொண்ட பாரிய வெற்றியாக தகவல் அறியும் உரிமையை குறிப்பிடலாம். நாம் இந்த உரிமையை சரியாக பயன்படுத்திக்கொள்வதால் மட்டுமே சட்டத்திற்கு உயிர் கிடைக்கும் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். ஒரு சிறிய விண்ணப்பப் படிவத்தின் மூலம் தனிப்பட்ட ஒரு பிரச்சினைக்குத் தீர்வு காண முடிகின்ற அதேசமயம் உயர்மட்டத்தில் இடம்பெறுகின்ற இலஞ்சம் மற்றும் ஊழல்களையும் வெளிச்சத்திற்கு கொண்டுவர முடியும். மக்களுக்கு கிடைத்த இந்த "குரல்" குரல் செய்தித்தாளின் மூலம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை உங்கள் வீட்டை நாடி வருகின்றது.

*ஊரும் பெயரும் மாற்றப்பட்டுள்ளது..



# தகவல் அறியும் உரிமை கிராமத்திற்கு

அம்பாறை மாவட்டத்தின் கோனகல - கொத்மலே பிரதேசம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள ஒரு கிராமமாகும். இந்தக் கிராமம் உஹன பிரதேச செயலகத்திற்குச் சொந்தமானது. இங்கு வாழும் மக்களுக்கு சுத்தமான குடிநீர், அதேபோல் மேலும் பல அடிப்படை வசதிகள் கிடைப்பதில்லை.

கிராமவாசிகள் தகவல் அறிவதற்கான விண்ணப்பப்படிவம் ஒன்றை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் சமர்பித்து குடிநீரைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் வினவியிருந்தனர். கிடைத்த நிதியின் அளவுக்கமைய குடிநீர் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என நீர் வழங்கல் சபை பதில் கடிதம் அனுப்பியிருந்தது. ஆனால் கிராமவாசிகளின் குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காததால் கிடைத்த பதிலில் அவர்கள் திருப்தியடையவில்லை.

ஆனால் சட்டத்திற்கு இனங்க தகவல்களைக் கோரியிருந்ததால் கிராமவாசிகளுக்கு அதன் பின்னர் உரிய அதிகாரிகளைச் சந்தித்து தமது பிரச்சினை பற்றி ஆழமாக கலந்துரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. கொத்மலே பிரதேசத்து மக்கள் நீர் வழங்கல் சபை உத்தியோகத்தர்களுடன் தமக்குள்ள குடிநீர் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடினர். அதன் பின்னர் கிராம வாசிகளுக்கு குடிநீரை வழங்குவதற்காக பணம் ஒதுக்கப்பட்டிருந்த 200 மீட்டருக்கான குடிநீர் குழாயை இடும் பணிகள் நீர் வழங்கல் சபையால் நடைமுறைப்படுத்தப்பட்டன.

ஒரு குடும்பத்திற்கு வசிப்பதற்கு வீடு என்பது அத்தியாவசியமானது. அரசாங்கம் இந்த அவசியத்தை பூர்த்தி செய்யும் வகையில் சில நடவடிக்கைகளை முன்னெடுப்பதை நாம் கண்டிருக்கின்றோம். எனினும், சில சந்தர்ப்பங்களில் உண்மையாக தேவை இருப்பவர்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்காமல் போகும் சந்தர்ப்பங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கு தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் மூலம் வாய்ப்பு கிடைக்கின்றது. பருத்தித்துறை மாதனை பகுதியில் வசித்த மேரி லக்மினி* அவ்வாறு தகவல்களை வினவி தன்னுடைய தேவையைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளார்.

மேரி லக்மினுக்கு ஐந்து பிள்ளைகள். தன் பிள்ளைகள் பாடசாலை செல்லும் வயதில் இருந்தாலும்கூட யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த அவர்களுக்கு அவர்களுக்கென்று ஒரு வீடு இல்லை. பருத்தித்துறையில் அமைந்துள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் பத்து வருடங்களாக வீடு ஒன்றுக்கான கோரிக்கை விடுத்தும் அந்தத் தேவை பூர்த்தி அடையவில்லை. லக்மினிக்கு வீடு ஒன்று தேவையாக இருந்தது. ஆனால், ஏன் அது தனக்குக் கிடைக்கவில்லை என்பதை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு இருக்கவில்லை. எவ்வாறாயினும், தகவலுக்கான உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் வீடு ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு தனக்கு ஏன் தகுதி இல்லை என்பதை அரியும் முயற்சியில் அவர் இறங்கினார். அதன் பயனாக பத்து ஆண்டுகளின் பின்னர் அவருக்கென்றே ஒரு வீடு கிடைத்தது.

நமது அன்றாட வாழ்க்கைக்காக தகவலுக்கான உரிமைச் சட்டத்தை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது என்பது பற்றி பலருக்கும் தெரியாது. ஆகவே, அந்தச் சட்டம் தொடர்பாகவும் அதனை எந்தெந்த நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தலாம் என்பது பற்றியும் விழிப்புணர்வு செய்யும் வகையில் ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீ லங்கா நிறுவனம் பல்வேறு பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றது. மேலே தரப்பட்டுள்ள உதாரணங்கள், நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் பலன்கள் எனலாம். குறிப்பாக, எங்கள் நிறுவனம் பல்வேறு கிராமங்களில் மக்கள் மத்தியில் முன்னெடுத்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் இப்பிரச்சினைகள் பற்றி பேசப்பட்டதோடு, அதற்கு தீர்வாக நாங்கள் நடத்திய சந்திப்புகளின்போது தகவல் அறியும் விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவித்த யோசனை முக்கிய பங்காற்றி இருக்கிறது என்பது எமது வலுவான நம்பிக்கையாக உள்ளது. உண்மையாகவே மேலே குறிப்பிடப்பட்டுள்ள கொத்மலே உஹன பிரதேசத்தில் காணப்பட்ட பிரச்சினை தொடர்பில் கிராமவாசிகளுக்கும் நீர் வழங்கல் சபையின் உத்தியோகத்தர்களுக்கு இடையில் சந்திப்பு ஒன்றை ஏற்படுத்த இடையீடு செய்யும் வாய்ப்பு கிடைத்ததையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சி அடைந்தோம்.

அந்த வகையில், உங்களுடைய சமூகத்தில் அல்லது கிராமத்தில் காணப்படுகின்ற ஒரு பிரச்சினை தொடர்பில் அல்லது ஏற்பட்டுள்ள மோசடி அல்லது ஊழல் தொடர்பான தகவல்களை தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் ஊடாக அறிந்து கொள்ள முடியுமா அல்லது முடியாதா என்ற சந்தேகம் உங்களுக்கு இருக்குமானால் இந்த செய்தித்தாளில் தரப்பட்டுள்ள முகவரி அல்லது இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்க.

*ஊரும் பெயரும் மாற்றப்பட்டுள்ளது..




# மக்களுக்கு நெருக்கமான "RTI Van" நிகழ்ச்சித்திட்டம்

அம்பாறை நிந்தவூர் பிரதேசத்திற்குரிய கடற்கரை பிரதேசம் துப்பரவு செய்யப்படாமல் மாலை நேரங்களில் தங்களுடைய பிள்ளைகளோடு அங்கு வரும் பெற்றோரும், கடற்கரையின் அழகை ரசிப்பதற்கு வரும் நூற்றுக்கணக்கானவர்களும் அந்த வாய்ப்பை இழந்திருந்தனர். தகவல் அறியும் உரிமை தொடர்பில் மக்களை விழிப்புணர்வு செய்வதையும், தகவல்களினால் மக்கள் வலுவூட்டப்படுவதையும் நோக்கமாகக் கொண்டு கிராமங்கள்தோறும் நாம் முன்னெடுத்து வரும் "RTI Van" நிகழ்ச்சித்திட்டம் 2019 ஆண்டில் அம்பாறை நிந்தவூர் பிரதேசத்தில் கால் பதித்தது. அதன்போது இடம்பெற்ற சந்திப்பில் மேற்படி பிரச்சினை குறித்து பிரதேசவாசிகளுடன் கலந்துரையாடி பிரதேச சபையில் இதனுடன் சம்பந்தப்பட்ட தகவல்களை அறிந்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிக்க முடிந்தது. அதன் பின்னர் ஒரு சில நாட்களுக்குள் பிரதேச சபை உரிய கடற்கரையை துப்பரவு செய்ய நடவடிக்கை எடுத்திருந்தது. தகவலுக்கான உரிமைச் சட்டத்தை தகவல்களை அறிந்து கொள்வதற்காக மட்டுமன்றி தமது தனிப்பட்ட மற்றும் பொதுவான பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கான ஒரு கருவியாகவும் பயன்படுத்த முடியும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

சூழலைப் பாதுகாப்பது எமது கடமை. அதேபோல் அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் நமது பொறுப்பை உரியமுறையில் நிறைவேற்றுவதற்காக சரியான வேலைத்திட்டம் ஒன்றையும், பொறிமுறை ஒன்றையும் நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த பொறுப்புகள் தவற விடப்பட்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் அதுபற்றி உரிய நிறுவனத்திடம் கேள்வி கேட்கும் உரிமை எமக்கு கிடைத்திருக்கின்றது. அதேபோல் அவ்வாறு பொறுப்புகளை தட்டிக் கழிப்பதற்கு நியாயமான காரணம் உண்டா என்பதையும் ஆராய வேண்டும். அரச நிறுவனம் ஒன்றினால் நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய பொறுப்பு நிறைவேற்றப்படாத சந்தர்ப்பத்தில் அதற்கான முதல் நடவடிக்கையாக தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் எம்மால் தகவல்களைப் பெற முடியும்.

எவ்வாறாயினும், இந்த தகவல் உரிமையை எமது பிரச்சினைகளை தீர்க்கும் முதற்கட்ட நடவடிக்கையாக இனம் காணவேண்டும். நிந்தவூர் கடற்கரை தொடர்பாக தகவல் அறியும் விண்ணப்பத்தை சமர்ப்பித்ததும் அப்பிரச்சனைக்கு தீர்வுக் கிடைத்தது. ஆனால், தகவலுக்கான விண்ணப்பப் படிவம் ஒன்றை சமர்ப்பிப்பதால் மட்டும் தீர்வு கிடைக்காத வேறு விடயங்களும் இருக்கலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் எமக்கு கிடைக்கும் தகவல்களைப் பயன்படுத்தி அவற்றைக்கொண்டு பிரச்சனையை தீர்ப்பதற்குரிய அடித்தளத்தை அமைத்துக் கொள்ளவேண்டும். அதன் பின்னர் நீதிமன்றம் சார்ந்த அல்லது சாராத பொறிமுறை ஒன்றின் மூலம் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியும்.